MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

செவ்விலக்கிய யாப்பியல்: உரைகாரர் நோக்கு

முதுமுனைவர் ப.திருஞானசம்பந்தம்

உதவிப் பேராசிரியர், தமிழ உயராய்வு மையம்,

மன்னர்திருமலை நாயக்கர்கல்லூரி(தன்னாட்சி)

மதுரை - 4 - thirugnanasammandamp@mannarcollege.ac.in

DOI 10.5281/zenodo.16432273.

Abstract :

The scribes can be considered as a community of scholars who have absorbed the literary texts and grammatical conventions that emerged in the classical period from the fourth century BC to the seventh century AD. In particular, the Yappilakana texts, which help in understanding the form of the verse, have been particularly active. This can be seen through the Vritthiyarai that arose in the Yapparungala, the Gunasakararurai that arose in the Karikai, and the Tolkappiya verse texts (Ilampuranam, Perasiriyam, Nachinarkiniyam).

The scribes who came to explain the idea of the original author have taken evidence from the classical texts and dealt with it. These principles have been studied and studied by the scribes even before they were published in print. The scribes have also made efforts to bring other new types of composition conventions that emerged during the time they began writing the text into their textual framework. In this context, the poems of the Sangam literatures such as Ettutoka and Patuppattu, and the poems of the late Sangam literatures such as Pathinenkeezhkanakku, Muthollayiram and Silappathikaram have been taken and explained by the Yappilakana commentators in their respective texts. The situation that has been pointed out by the Manimekalai commentators is also noteworthy here. The commentators have used the poems of these sevvilakiya manuscripts to explain the elements of the sevvilakiya, the sevvilakiyas, and the sevvilakiyas. The commentators have collected evidence for the form structure described by these specific sevvilakiya works. By making the majority of the sevvilakiya manuscripts as evidence, those texts also serve as tools that help in understanding the structure and content of those manuscripts. The method in which each commentator has approached the sevvilakiya manuscripts is noteworthy here. It is also possible to see a situation where a poem presented by one commentator as evidence of a certain form is interpreted differently by another commentator. In this context, a study of the form structure of the classical manuscripts under the interpretation of the commentators is necessary here.

Key Words : Grammar - Illampuranam - Perasiriyam - Nachinaarkiniyam - Poetry

கி.மு. நான்காம் நூற்றாண்டுத் தொடங்கி கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையிலான செவ்வியல் காலப்பரப்பில் உருப்பெற்ற இலக்கியப் பிரதிகளையும் இலக்கண மரபுகளையும் உள்வாங்கிய புலமைச் சமூகமாக உரையாசிரியர்களைக் கருதமுடியும். குறிப்பாகச் செய்யுளின் வடிவத்தினைப் புரிந்துகொள்ள உதவுகின்ற யாப்பிலக்கண உரைகள் தனித்தன்மையுடன் தொழிற்பட்டுள்ளன. இதனை யாப்பருங்கலத்திற்கு எழுந்த விருத்தியுரை, காரிகைக்கு எழுந்த குணசாகரருரை, தொல்காப்பியச் செய்யுளியல் உரைகள் (இளம்பூரணம், பேராசிரியம், நச்சினார்க்கினியம்) ஆகியவற்றின் மூலம் அறிய முடிகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

மூல நூலாசிரியரின் கருத்தை விளக்க வந்த உரையாசிரியர்கள் செவ்விலக்கியப் பிரதிகளிலிருந்து சான்றுகளை எடுத்துக் கையாண்டுள்ளனர். இவ்விக்கியங்கள் அச்சில் பதிப்பிக்கும் முன்னரே உரைகாரர்களால் பயிலப்பட்டு ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. தாம் உரை எழுதப் புகுந்த காலத்துக்குள் தோன்றிய பிற புதுவகை யாப்பு மரபுகளையும் தமது உரை சட்டத்திற்குள் கொண்டு வருவதற்கேற்ற முயற்சிகளை உரையாசிரியர்கள் முன்னெடுத்துள்ளனர். இந்நிலையில் சங்ககால இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றின் பாடல்களும், சங்க மருவிய கால இலக்கியங்களான பதினெண்கீழ்க்கணக்கு, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம் ஆகியவற்றின் பாடல்களும் யாப்பிலக்கண உரைகாரர்களால் தத்தம் உரைகளில் எடுத்து விளக்கப்பட்டுள்ளன. மணிமேகலை உரைகாரர்களால் பெயரளவில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிலையும் இங்கு நோக்கத்தக்கது. யாப்பு உறுப்புகள் பாவகைகள், பாவினங்கள் ஆகியவற்றை விளக்க இச்செவ்விலக்கியப் பிரதிகளின் பாடல்களை உரையாசிரியர்கள் பயன்படுத்தி யுள்ளனர். குறிப்பிட்ட இவ்விலக்கண ஆக்கங்கள் கூறியுள்ள வடிவ அமைப்பிற்கான சான்றுகளை உரையாசிரியர்கள் திரட்டித் தந்துள்ளனர். பெரும்பான்மையும் செவ்விலக்கியப் பிரதிகளைச் சான்றுகள் ஆக்குவதன் மூலம் அப்பிரதிகளின் அமைப்பினையும் பொருண்மையினையும் புரிந்து கொள்ள உதவுகின்ற கருவிகளாகவும் அவ்வுரைகள் அமைந்துவிடுகின்றன. ஒவ்வோர் உரைகாரரும் செவ்விலக்கியப் பிரதிகளை அணுகியுள்ள முறைமை இங்குக் கவனத்திற்குரியது. குறிப்பிட்ட சில வடிவத்திற்கான சான்றாக ஓர் உரைகாரரால் காட்டப்படுகின்ற பாடல் பிறிதொரு விளக்கத்தினைப் பெறுவதாக வேறோர் உரைகாரரால் எடுத்தாளப்படுகின்ற நிலையினையும் காண முடிகின்றது. இந்நிலையில், உரைகாரர்களின் விளக்கத்திற்குட்பட்ட செவ்விலக்கியப் பிரதிகளின் வடிவ அமைப்பு குறித்த ஆய்வு இங்கு அவசியமாகின்றது.

தமிழ் யாப்பு மரபு என்பது செழுமை வாய்ந்த ஒன்றாக உள்ளது. தமிழில் இன்று கிடைக்கின்ற இலக்கண நூல்களுள் முதல்நூல் தொல்காப்பியம். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரமாக, இருபத்தியேழு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் செய்யுளுக்குரிய இலக்கணத்தை விரிவாகப் பேசுகின்றார். தொல்காப்பியர் மற்ற இயல்களைக் காட்டிலும் செய்யுளின் வடிவத்தினைப் பேசும் செய்யுளியலுக்கு அதிக முக்கியத்துவத்தைத் தந்துள்ளார். செய்யுளியலில் முப்பத்து நான்கு உறுப்புகளைச் சுட்டியுள்ளார். அதில் ஒன்று யாப்பு. 'எழுத்து முதலாக அசை, சீர், அடி என ஈண்டுக் கூறப்பட்ட அடியினால், தான் குறித்த பொருளை இறுதியடிளவு முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பு' என்று விளக்கம் தருவர் இளம்பூரணர் (தொல்.செய்.நூ.74 இளம்.). எனவே ஓர் அடிக்குள்ளாகவே தான் கருதிய பொருள் விளங்கப் பாடப்படுவது யாப்பு ஆகும். தொல்காப்பியர் யாப்பு என்பதனைத் தனி உறுப்பாகக் கொள்ள பிற்கால யாப்பிலக்கணிகள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு என்னும் ஏழுவகை உறுப்புகள் சேர்ந்து குற்றமின்றி நடப்பதை யாப்பாகக் கொண்டுள்ளனர். தொல்காப்பியர் காலத்தில் செய்யுள், பாட்டு, பா, யாப்பு ஆகியவை வெவ்வேறு வகைப் பொருள் நிலையில் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இவர் காலத்திற்குப் பின் யாப்பருங்கலத்தின் காலத்தில் ஒரே பொருளைக் குறிப்பதாக உள்ளது.

ஆங்கில மரபில் இலக்கிய வகைகளைக் கால அடிப்படையில் பகுத்து நோக்கும் மரபு உண்டு. "ஆங்கில சாகுசன் காலம், சாகுசன் சாயல் காலம், இருண்ட காலம், சானட்டு காலம், செகப்பிரியர் காலம் என ஐந்தாகப் பிரித்துக் கூறுவர் பிரேவர் எனும் திறனாளி" (ந.வீ.செயராமன், சிலப்பதிகார யாப்பமைதி, ப.33). இம்மரபைத் தமிழ் யாப்பியலின் வளர்ச்சியோடு ஒப்பிட்டு நோக்கும் ந.வீ.செயராமன், தமிழ்

http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

யாப்பியல் வளர்ச்சியைக் கால அடிப்படையில் நான்காகப் பகுத்துள்ளார். இதை, "சங்க காலம், காப்பிய காலம், சிற்றிலக்கிய காலம், தற்காலம் எனக் காலக் கூறிட்டு ஆய்தல் சாலும். (ந.வீ.செயராமன், சிலப்பதிகார யாப்பமைதி, ப.35) என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இலக்கிய வகைமைகளின் அடிப்படையில் பகுத்து நோக்கும்பொழுது செவ்வியல் யாப்பு வடிவங்களின் செல்வாக்கினை நன்கு உணர்ந்து கொள்ளலாம். யாப்பிலக்கண உரைகாரர்களின் செவ்விலக்கிய யாப்பியல் குறித்த புரிதலைக் கீழ்க்கண்ட நிலைகளில் பகுத்துக் கொள்ள முடியும்.

- செய்யுள் உறுப்புகளுக்கு / யாப்பு உறுப்புகளுக்கு உரையாசிரியர்களால் மேற்கோள்களாகக் கொள்ளப்படுகின்ற செவ்விலக்கியப் பாடல்களும் அவற்றின் பொருத்தப்பாடுகளும்.
- ஆசிரியம், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் பாநிலையில் காட்டப்படுகின்ற செவ்விலக்கியப் பாடல்களும் அவற்றின் விளக்க முறைகளும்.
- தொல்காப்பியச் செய்யுளியல் யாப்பினைப் பொருண்மையோடு தொடர்பு படுத்தியுள்ளதால் பொருண்மைக்கும் வடிவத்திற்கும் உரைகாரர்களின் சான்று காட்டலுக்குமான இடைவெளியினைக் கவனப்படுத்துதல்.

தமிழ் யாப்பிலக்கணங்களின் உருவாக்கத்திற்கு மூலங்களாகவும் உரையாசிரியர்களுக்கு ஆய்வுத்தரவுகளாகவும் அமைந்துள்ள செவ்விலக்கியப் பிரதிகளின் யாப்பியலை உரை வழி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

செய்யுள் உறுப்புகள் / யாப்பு உறுப்புகள்

தொல்காப்பியர் முப்பத்துநான்கு செய்யுள் உறுப்புகளை இருதொகுதிகளாகப் பகுத்துப் பேசுகின்றார். மாத்திரை, எழுத்தியல், அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள்வகை, துறை, மாட்டு, வண்ணம் ஆகிய இருப்பத்தாறு உறுப்புகளை 'யாப்பியல் வகையின் இருப்பத்தாறு' எனக் குறிப்பிடுகின்றார். அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் வனப்புகள் எட்டினை மற்றொரு தொகுதியாகக் கொள்கின்றார். இவற்றை யாப்பியல் ஆய்வாளர்கள் மேலும் சில உள்வகைப்படுத்தியுள்ளனர். தமிழண்ணல், 1.வடிவம் சார்ந்த உறுப்புகள், 2.பொருள் பற்றிய உறுப்புகள், 3.நாடகப் பண்பு சார்ந்த இலக்கிய உறுப்புகள், 4.பெரும்பாலும் வடிவச் சார்பும் சிறிதளவு பொருட் சார்பும் உடைய உறுப்புகள், 5.வடிவமும் பொருளும் ஒருங்கிணைந்து கூடியமையால் உருவான உறுப்புகள் என ஐந்தாகப் பகுக்கின்றார் (சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள், பக்.14,15). சோ.ந.கந்தசாமி, 1.அடிப்படை உறுப்புகள், 2.பொருள் புலப்பாட்டு உறுப்புகள், 3.வனப்புகள் என மூன்று வகையாகப் பகுக்கின்றார் (தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம்-முதல்பகுதி, ப.81).

தொல்காப்பியர் கூறிய முப்பத்துநான்கு உறுப்புகளுள் எழுத்து, அசை, சீர், அடி, தொடை, தூக்கு ஆகிய உறுப்புகளோடு, இவர் கூறாத தளை என்னும் உறுப்பினைச் சேர்ந்து ஏழாகப் பிற்கால யாப்பிலக்கணிகள் சுட்டியுள்ளனர். இவை யாப்புறுப்புகள் என்னும் பெயரில் வழங்கப்படுகின்றன. இவ்வாய்வு செய்யுள் உறுப்புகளின் வகைப்பாடுகளில் சோ.ந.கந்தசாமியின் பகுப்பினை அடிப்படையாகக் கொள்கின்றது. *"இவ்வுறுப்புக்களில் மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, பா, அளவு என்பன செய்யுளின் புற அமைப்பினைத் தீர்மானிப்பன. திணை, கைகோள், பொருள், துறை, கூற்று,*

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

கேட்போர், இடம், காலம் என்பன செய்யுளின் உள்ளடக்கத்தினைத் தீர்மானிப்பனவாகும். மெய்ப்பாடு, எச்சம், முன்னம், மாட்டு, வண்ணம், நோக்கு என்பன செய்யுளின் உள்ளடக்கத்தினைப் புலப்படுத்திக் காட்டுதற்குக் கருவியாகப் பயன்படும் உறுப்புக்களாகக் கொள்ளத்தக்கவை. எட்டுவகை வனப்புக்களும் செய்யுளின் அகம், புறம், ஆகிய இருவகை அமைப்பினையும் தீர்மானிப்பன. செய்யுளின் புறத்தோற்றமும் அக அமைப்பும் சேர்ந்து கற்போர்க்குக் கொடுக்கும் அனுபவத்தினைப் பயன் என்னும் உறுப்பாகக் கொள்ளுதல் வேண்டும்" (தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற் பாகம் - முதல்பகுதி, பக்.89,90). இவற்றின் அடிப்படையிலேயே உரையாசிரியர்களின் செவ்விலக்கிய யாப்பியல் குறித்த புரிதல் இங்கு விளக்கப்படுகின்றது.

செய்யுளின் புறத்துறுப்புகள்

மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, பா, அளவு என்னும் இவ்வுறுப்புகள் செய்யுளின் புறவடிவத்தினைத் தீர்மானிக்கின்றன. தொல்காப்பியரால் முன்வைக்கப்பட்ட இவ்வுறுப்புகளுள் மாத்திரை, யாப்பு, மரபு, தூக்கு, பா என்பன பிற்கால யாப்பிலக்கண நூல்கள் பலவற்றில் குறிப்பிடப்படவில்லை. செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகத் தளையைத் தொல்காப்பியர் கொள்ளவில்லை; ஆனால் தளையைப் பற்றிச் சில விடங்களில் குறிப்பிட்டுள்ளார். பிற்கால யாப்பிலக்கணிகள் தளையைத் தனி உறுப்பாகக் கொண்டு இலக்கணம் வகுத்துள்ளனர். இனித் தொல்காப்பியர் குறித்துள்ள செய்யுள் உறுப்புகளின் வளர்ச்சி நிலையில் உரையாசிரியர்களின் செவ்விலக்கிய யாப்பியல் சிந்தனைகள் விளக்கப்படுகின்றன. விரிவஞ்சி சில உறுப்புகள் குறித்து மட்டும் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. [விரிவாகக் காண *'தமிழ் யாப்பிலக்கண உரை மரபுகளும் செவ்வியல் யாப்பும்'* என்னும் கட்டுரையாசிரியரின் முதுமுனைவர் பட்ட ஆய்வேட்டினைப் பார்க்க.]

மாத்திரை எழுத்து

மாத்திரையின் அளவும் எழுத்தின் வகைகளும் எழுத்ததிகாரத்தில் சொல்லப்பட்ட நிலையிலேயே செய்யுளியலிலும் அமைகின்றது என்கிறார் தொல்காப்பியர். மாத்திரை என்பது எழுத்தினை ஒலிப்பதற்கு இயல்பாக ஒருவர் கொள்ளும் கால அளவினைக் குறிக்கின்றது. மனிதனின் இயல்பான கண்ணிமைத்தற்கும், கைநொடித்தற்கும் தேவையான பொழுதை ஒரு மாத்திரையின் அளவாக வரையறுப்பர். மாத்திரை என்பது எழுத்தினை ஒலிப்பதற்குத் தேவைப்படும் நேரத்தையே குறித்தலின், எழுத்தினின்று பிரித்தெடுத்துக் கூற முடியாது. எனவே தொல்காப்பியர் மாத்திரையின் இலக்கணத்தைக் கூறும்பொழுது எழுத்தையும் சேர்த்தே சுட்டுகின்றார். செய்யுட்களின் வேறுபாட்டினைச் சுட்டுவதற்கு மாத்திரையின் அளவு தேவைப்படுவதால் மாத்திரையை முதல் உறுப்பாகத் தொல்காப்பியர் கொண்டுள்ளார். பின்வந்த யாப்பிலக்கணிகள் எழுத்தைக் கூறும்போது அதனை ஒலித்தற்குரிய காலஅளவான மாத்திரை உடன் பெறப்படுகின்ற காரணத்தினால் மாத்திரையைத் தனி உறுப்பாகக் கொள்ளவில்லை. எனவே அவர்கள் எழுத்தினை முதல் உறுப்பாகக் கொண்டுள்ளனர்.

உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு, சார்பு மூன்று என எழுத்துகளை முப்பத்து மூன்றாகத் தொல்காப்பியர் வரையறுக்கின்றார். இவற்றுள் உயிர்எழுத்து குறில் நெடில் என இருவகைப்படும். குறில் ஒரு மாத்திரையவு பெறும். நெடில் இரண்டு மாத்திரை அளவு பெறும். மெய் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்றுவகைப்படும். இவை அனைத்தும் அரை மாத்திரை அளவு பெறும். குற்றியலுகரம்,

http://Creativecommons.org//license/by/4.0/.

குற்றியலிகரம், ஆய்தம் அரை மாத்திரை அளவினைப் பெறும். உயிரளபெடை மூன்றுமாத்திரை; ஒற்றளபெடை ஒரு மாத்திரை; ஐகாரக்குறுக்கம் ஒரு மாத்திரை; மகரக் குறுக்கம் கால்மாத்திரை; உயிர் மெய் ஏறிய உயிர் அளவினைப் பெறும். இவ்வாறு ஒவ்வொரு எழுத்திற்குமுரிய மாத்திரையின் அளவினை விளக்கும் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் நச்சினார்க்கினியர் உயிரளபெடைக்குக் கலித்தொகையையும் (கலித்.10:5;10:7), ஒற்றள பெடைக்கு அகநானூற்றினையும் (அகம்.4) கலித்தொகையையும் (10:9) சான்று காட்டுகின்றார். மேற்சுட்டிய எழுத்துகள் தொடைக்கும் வண்ணத்திற்கும் எவ்வாறு உறுப்பாக அமைகின்றன என்பதைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும், *“நெடிலும் அளபெடை யிரண்டும் உயிரும் உயிர்மெய்யும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் ஐகாரக்குறுக்கமும் ஔகாரக்குறுக்கமுமெனப் பத்துந்* ***தொடைக்கு*** *உறுப்பாம். குறிலும் நெடிலும் அளபெடையிரண்டும் இனம் மூன்றும் ஆய்தமும்* ***வண்ணத்திற்கு*** *உறுப்பாம்” (தொல்.செய்.நூ.2 பேரா. நச்சர்)* என நுட்பமாகச் சுட்டுகின்றனர்.

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் உயிர், மெய், உயிர்மெய், குறில், நெடில், அளபெடை, வல்லினம், மெல்லினம், இடையினம், சார்பெழுத்துகள், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் என்னும் பதினைந்து எழுத்துகளை அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் என வகைப்படுத்துகின்றார். இவ்வெழுத்துகள் எவ்வாறு அமைகின்றன என்பதைக் கூறுவதோடு, சிலவெழுத்துகள் செய்யுளில் எப்படி மிகுந்து வருகின்றன என்பதற்குத் திருக்குறளிலிருந்து மட்டும் சான்றுகாட்டுகின்றார். அவை வருமாறு: மெய் மிக்கு வருதல் (குறள்.350), உயிர் மிக்கு வருதல் (குறள். 381), குற்றெழுத்து மிக்கு வருதல் (குறள்.391), நெட்டெழுத்து மிக்கு வருதல் (குறள். 127), மெல்லினம் மிக்கு வருதல் (குறள்.742), குற்றியலிகரம் வருதல் (குறள்.66), ஆய்தம் வருதல் (குறள்.85), ஐகாரக் குறுக்கம் வருதல் (குறள்.167), மகரக் குறுக்கம் வருதல் (குறள்.63, 1191) ஆகியன. செய்யுள் உறுப்புகளுள் எழுத்திற்கு நச்சினார்க்கினியர் சங்கப் பாடல்களைச் சான்று காட்ட, விருத்தியுரைகாரர் திருக்குறளைச் சான்றுகாட்டுகின்றார்.

மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும் சில எழுத்துகள் செய்யுளில் சீர், தளை, வண்ணம் ஆகியன சிதையும்போது அலகு பெறுதலும், அலகு பெறாமையும் உண்டு. செய்யுளில் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், உயிரளபெடை, ஒற்றள பெடை ஆகியன அலகு பெறாது. விருத்தியுரைகாரர் ஒற்றளபெழுந்து நேரசையாதற்கு மலைபடுகடாமினையும் (352), குற்றியலிகரம் அலகுபெறாதற்குத் திருக்குறளையும் (குறள்.66,254) சான்றுகாட்டுகின்றார். குற்றியலிகரம், குற்றியலுகரம், உயிரளபெடை ஆகியன தளை, சீர், வண்ணம் கெடாமல் செய்யுளின் சிலவிடங்களில் அலகு பெறும் என்கிறார் விருத்தியுரைகாரர். *“சீர்தளை வண்ணம்’ என்னாது, ‘தளைசீர் வண்ணம்’ என முறை பிறழக் கூறினமையால், குற்றியலிகரக் குற்றியலுகரங்களைக் குற்றெழுத்தே போலக் கொண்டு அலகிடப்படும் எனக் கொள்க. ‘தளைசீர் வண்ணம் கெட வரும்’ என்னாது ‘தாம் கெட வரினே’ என்ற விதப்பினால், தனிநிலை அளபெடை நேர்நேர் ஆகவும், இறுதிநிலை அளபெடை நிரைநேர் ஆகவும் வைக்கப்படும். மூன்றுமாத்திரையின் மிக்க பல மாத்திரை யான்வரினும்’ எனக் கொள்க” (யாப்.வி.நூ.4, ப.45).* உயிரளபெடை அலகு பெறுவதற்கு முத்தொள்ளாயிரம் (2) திருக்குறள் (1087), மலைபடுகடாமின் இறுதி வெண்பா ஆகியவற்றைச் சான்றுகாட்டுகின்றார் விருத்தியுரைகாரர். இவர் காட்டும் மலைபடுகடாமின் இறுதி வெண்பா: *தூஉஉத் தீம்புகை தொல்விசும்பு போர்த்ததுகொல் / பாஅஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல் / மாஅ மிசையான்கொல் நன்னன் நறுநுதலார் / மாஅமை எல்லாம் பசப்பு (யாப்.வி.நூ.4, ப.45).* இவ்வெண்பாவின் முதலடியிலுள்ள முதல்சீரில் (தூஉஉத்) உயிரளபெழுந்து நான்கு

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

மாத்திரையின் அளவைப் பெறுவதோடு வெண்டளை சிதையாமல் வந்துள்ளது. இவ்வெண்பாவின் முதலடியினை நச்சினார்க்கினியர் எழுத்ததிகாரத்தின் நூன்மரபில் (நூ.6) சான்றுகாட்டி நான்கு மாத்திரை பெற்று வந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் பேராசிரியர் 'செய்யுளியலில், வெண்பாவினுளாயின் ஆசிரியவடி முழுவதுந் தன்றளையோடு வாராது' என்பதற்கு இவ்வெண்பாவை எடுத்துக் காட்டுகின்றார். *"முதலடியுள்ளே 'தூஉத் தீம்புகை'யென ஓர் ஆசிரியத்தளைவர மற்றையன வெண்டளையாகி வந்தமையின், அற்றன்றி முழுவதூஉம் ஆசிரியத்தளை வரின் வெண்பா சிதையுமாகலின் இதனையே **சொல்லின் முடிவிலக்கணத் தான் வெண்பா** வென்றான்" (தொல்.செய்.நூ.62 பேரா.).* மலைபடுகடாமின் இறுதி வெண்பாவை விருத்தியுரைகாரர் நச்சினார்க்கினியர் இருவரும் சான்றுகாட்டுவதற்கும் பேராசிரியர் சான்றுகாட்டுவதற்கும் வேறுபாடு இருக்கின்றது. ஆனால் விருத்தி யுரைகாரரும் நச்சினார்க்கினியரும் காட்டும் சான்றே வெண்பா இலக்கணத்தில் சிதையாமல் உள்ளது. மேலும் உயிரளபெடை அளபெழுந்து வந்து அலகு பெற்று வெண்பாவிற்குரிய தளையினைப் பெறுகின்றது. பத்துப்பாட்டின் அச்சுநூற் பதிப்புகளில் இவ்வெண்பா பாடவேறுபாட்டாய்வுக்குரிய வகையில் அமைந்திருக்கிறது. இது தனித்து ஆராய்தற்குரியது.

அசை

செய்யுளின் மூன்றாவது உறுப்பாக அமையும் இவ்வுறுப்பினை 'அசைவகை' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். 'அசைவகை' என்பதற்கு அசைக் கூறுபாடு என்று விளக்கும் தருவார் பேராசிரியர் (தொல்.செய்.நூ.1). அசை பற்றிய வரையறையைத் தொல்காப்பியர் தரவில்லை; ஆனால் அதன் வகையினைச் சுட்டுகின்றார். குறில், நெடில் தனிந்து வந்தும், குறில் இணைந்தும், குறில் பின்னர் நெடில் இணைந்தும், இவற்றோடு ஒற்று அடுத்தும் முறையானே வருதல் நேரசை, நிரையசை என இரண்டு வகைப்படும் என்கிறார் தொல்காப்பியர். இந்நேர், நிரையசைகளைச் சார்ந்து குற்றியலுகரமாதல், முற்றியலுகரமாதல் வரின் முறையே நேர்பு நிரைபு அசைகளாகும் என்கிறார். இவ்வாறு அசையினை நான்கு வகையாகத் தொல்காப்பியர் பகுத்துள்ளார். முன்னிரண்டினை இயலசை என்றும் பின்னிரண்டினை உரியசை என்றும் பெயரிட்டுள்ளார். யாப்பருங்கல விருத்தியுரைகாரர் அசை என்பதற்கு, 'எழுத்து, அசைத்து இசைகோடலின் அசையே' (யாப்.வி.நூ.1,ப.17 உரை மேற்கோள்.) என்று விளக்கந்தந்துள்ளார். தொல்காப்பியருக்குப் பின்வந்த இலக்கணிகள் நேர்பு, நிரைபு அசைகளைத் தேமா, புளிமா என்னும் வாய்பாடுடைய ஈரசைச் சீர்களாகக் கொண்டுள்ளனர். ஆனால் வெண்பாவின் இறுதியில் இவை வரும் பொழுது அதனை காசு, பிறப்பு என்னும் ஓசையூட்டி ஓரசைச் சீர்களாகக் கொண்டுள்ளனர். யாப்பருங்கல விருத்தியுரையின் இக்கருத்தை இளம்பூரணர் அடியொற்றியுள்ளார் (தொல்.செய்.நூ.4 இளம்.). இளம்பூரணர் நேர், நிரை, நேர்பு, நிரைபு அசைகளுக்குத் திருக்குறளிலிருந்து (10,4,5,7) சான்றுகாட்டுகின்றார். விருத்தியுரைகாரர் நேரசைக்கு அகநானூற்றையும் (85), மலைபாடுகடாமையும் (105,106) சான்றாகத் தருகின்றார். எழுத்துகளுக்குரிய மாத்திரையினைக் கூறுமிடத்து ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம் ஒன்றரை மாத்திரை அளவுபெறும் என்று குறிப்பிட்டுள்ள விருத்தியுரைகாரர் செய்யுளில் இவை வரும்பொழுது நேரசையாகும் என்கிறார்.

தனிக்குறில் நேரசை ஆகும் இடங்கள்

ஒற்றெழுத்தினைச் சார்ந்து வாராத தனிக்குறில் விட்டிசைக்கும்போது அது நேரசையாக அலகிடப்படும். இக்கருத்தைத் தொல்காப்பியர், பல்காயனார், மயேச்சுரர், அமிதசாகரர் முதலியோர்

http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

முன்வைத்துள்ளனர். இதற்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், விருத்தியுரைகாரர் ஆகிய நால்வரும் நாலடியாரின் (9) பாடலைச் சான்றுகாட்டுகின்றனர். சான்று காட்டுவதில் நால்வரும் உடன்படும் நிலையில் விட்டிசைக்கும் இடத்தை வரையறுக்கையில் வேறுபடுகின்றனர். இளம்பூரணர் விட்டிசைக்கும் இடங்கள் குறித்துக் கருத்து எதுவும் கூறவில்லை. ஆனால் பேராசிரியர், *“விட்டு இசைக்கும் இடந்தான் மூன்றென்பது உரையிற் கொள்க. அவை, “அ ஆ விழந்தான்” எனக் குறிப்பின்கண் வருதலும், ‘அ உ வறியா” எனச் சுட்டின்கண் வருதலும் “நொ அலையல்’ என ஏவற்கண் வருதலுமென விட்டிசைக்கு மிடந்தான் மூன்றெனப் பட்டது” (தொல்.செய்.நூ.7)* என்று குறிப்பிடுகின்றார். இவ்வுரையைத் தொடரும் நச்சினார்க்கினியர் விருத்தியுரைகாரர் குறிப்பிடும் கருத்தைப் பின்பற்றுகின்றார். தற்சுட்டு, ஏவல், குறிப்பு என மூன்று நிலையில் தனிக்குறில் நேரசையாகும் என்று அமிதசாகர் சுட்டுகின்றனர். இக்கருத்தை விளக்கும் விருத்தியுரைகாரர், *“குறிப்பே’ என ஏகாரம் மிகுத்துக் கூறிய அதனால், சுட்டின்கண்ணும் வினாவின் கண்ணும் ஒருசார் தனிக்குறில், மொழி முதற்கண் வந்து நேராசையாம்” (யாப்.வி.ப.52)* என்கிறார். இக்கருத்திற்கு வலுச்சேர்க்கும் நிலையில் பல்காயனார், மயேச்சுரர் ஆகியோரின் நூற்பாக்களை எடுத்துக் காட்டுகின்றார் (யாப்.வி.பக்.51,52). மயேச்சுரரின் கருத்துபடி தனிக்குறில் நேரசையாகக் கொள்ளப்படும் இடங்கள் ஐந்து என்கிறார் விருத்தியுரைகாரர்; இதற்கு நச்சினார்க்கினியரும் உடன்படுகின்றார். *“விட்டிசைத்து நேரசையாங்கால் ஏவல், குறிப்பு, தற்சுட்டு, வினா, சுட்டு என ஐந்து பொருளின்கண் விட்டிசைத்து நேரசையாம்” (தொல். செய்.நூ.7 நச்சர்.)* என வரிசை முறையைச் சிறிது மாற்றிக் குறிப்பிடுகின்றார். தனிக்குறில் மொழிசிதைத்து நேரசையாதற்குச் சான்றுகாட்டுவதில் உரையாசிரியர்கள் வேறுபட வில்லை. ஆனால் விட்டிசைக்கும் இடங்கள் மூன்று, ஐந்து என வரையறுப்பதில் வேறுபட்டுள்ளனர்.

அசையையும் சீரையும் ஓசையோடு சேர்த்து பாகுபாடுணர்த்தல் (அ) வகையுளி

அசையினையும் சீரையும் ஓசையொடு பொருத்திப் பாகுபாடு உணர்த்தல் நூல்வல்வோர் கண்ட நெறி என்பார் தொல்காப்பியர் (தொல்.செய்.நூ.10). இதற்கு உரை வகுக்கத் தொடங்கும் இளம்பூரணர் ‘வகையுளி யுணர்த்துதல் நுதலிற்று’ என்பார். விருத்தியுரையின் கருத்தை அடியொற்றி இளம்பூரணர் இவ்வாறு சுட்டுகின்றார். இதன்பின்னர், “பொருளோடு சொல்லை யறுத்தவழித் தளையுஞ் சீருஞ் சிதையின் அவ்வழி ஓசையை நோக்கி அதன்வழிச் சேர்த்து கொள்க” (தொல்.செய்.நூ.10 இளம்.) என விளக்கந் தருகின்றார். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அசையையும் சீரையும் ஓசையொடு சேர்த்துப் பார்க்கும் தொல்காப்பிய மரபைப் பிற்கால நூலாசிரியர் வகையுளி என்ற பெயரால் குறிப்பிடுவர் என்கின்றனர். இதற்கு இளம்பூரணர், *“மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் / நிலமிசை நீடுவாழ் வார் (குறள்.3). என்றவழி வாழ்வாரெனப் பொருணோக்கிச் சீராமாயின் ஓசை கெடும். அதன்கண் ‘வாழ்’ என்பதனை முதனின்ற சீரோடொட்டக் கெடாதாம்” (தொல்.செய்.நூ.10 இளம்.)* என்று திருக்குறளைச் சான்றுகாட்டி விளக்குகின்றார். இச்சான்றைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எடுத்துக்காட்டுவதோடு வேறு சில சான்றுகளைக் காட்டித் தொல்காப்பியரின் கருத்தினை வலுயுறுத்துகின்றனர். ‘அசையும் சீரும் என்ற உம்மையால் அடியினையும் இசையோடு சேர்த்து வகுத்துணர்த்துதல் வல்லோராறு’ என்கின்றனர். இதற்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அகநானூற்றின் கடவுள் வாழ்த்தினைச் சான்று காட்டுகின்றனர். *“இச்சூத்திரத்துள், ‘வகுத்தனருணர்த்தல்’ என்றமையின் இனி வெண்பாவினுள் வெண்சீரொன்றி வந்தவழியும் வேற்றுத்தளை விரவும் இடனுடைய; அவையும் இசையொடு சேர்த்தி வேறுபாடுணர்த்துக ... இன்னோரன்ன பலவுமுள; அவையெல்லாம் வரையறுத்து இலக்கணங் கூறப்படா,*

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

அவற்றை அவ்வாறு வேறுபடுத்துணர்த்துதல் அவ்வத்துறை போயினார் கடனென அடங்கக் கூறல் வேண்டி, 'அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி / வகுத்தனர் உணர்த்தல் வல்லோ ராறே' என்றானென்பது. உம்மையான் அடியினை வகுத்துணர்த்துதலும் கொள்க; அது. 'நுதல திமையா நாட்ட மிகலட்டுக் / கையது கணிச்சியொடு மழுவே' (அகம்.கடவுள்). என்புழி, 'இகலட்டு' என்னுஞ்சீர் 'எழுத்து முதலாக ஈண்டிய வடியிற், குறித்த பொருளை முடியநாட்டப்' பின்வந்ததாகலின் யாப்பென்னும் உறுப்பினுள் அடங்காது இகலட்டுக் கையதென மேலடியோடு பொருள் கூடியும், இசையொடு சேர்த்தி வகுத்துணர்த்தியதேயாம். இன்னும் இவ்விலேசானே எழுத்தல்லோசையும் அசையொடுஞ் சீரொடுஞ் சேர்த்தி வகுத்துணர்த்தலுங் கொள்க" (தொல்.செய்.நூ.11 பேரா.) என்கிறார் பேராசிரியர். இக்கருத்தையே நச்சினார்க்கினியரும் வலியுறுத்தியுள்ளார்.

'அசையுஞ்சீரும் இசையொடு சேர்த்தி' என்பதைக் கொண்டு பிற்கால யாப்பிலக்கணிகள் அகவலோசையை மூன்றாகவும், செப்பலோசையை மூன்றாகவும் பகுப்பர் என்கிறார் பேராசிரியர். நச்சினார்க்கினியர் பேராசிரியரைக் காட்டிலும் மேலும் ஒரு சான்றினைத் தருகின்றார். *"இனிக் கட்டளையடியையும் சீர்வகையடியையும் இசையொடு சேர்த்தி இன்னோசை யுணர்க. அஃது 'அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய' (செய்.58) என்ற பதினான் கெழுத்தளவும் வருங் கட்டளை வெண்பாவும் வெண்சீரேயொன்றிற் கலித்தளை தட்டு இன்னோசை பெறாதாம் ... இனிச் சீர்வகை யடிக்கும் 'யாதானு நாடாமா லூராமால்' [திருக்குறள்.397] யாதோதான் என்றாற் சீர்வகைத் துள்ளலோசையும், 'என்னொருவன்' என்றாற் சீர்வகைச் செப்பலோசையும் பிறக்குமாறு இசையொடு சேர்த்தியுணர்க..." (தொல்.செய். நூ.11 நச்சர்.)* என்று திருக்குறளைச் சான்றுகாட்டுகின்றார்.

இவ்வாறு இளம்பூரணர் வகையுளிக்குக் காட்டும் சான்றினைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் பின்பற்றினாலும் ஒருவரின் ஒருவர் நுட்பமாகத் தொல்காப்பியரின் கருத்தினை விளக்க மேலும் சில சான்றுகளைக் காட்டியுள்ளனர்.

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் ஒழிபியலில் வகையுளியை விளக்கியுள்ளார். *"வழுக்கா மரபின் வகையுளி சேர்த்தலும்' என்பது, அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் வண்ணமும் செய்யுட்கட்கழியாமை வகையுளி சேர்த்தலும் என்றவாறு. 'வகையுளி' என்பது, முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழி அறிந்து குற்றப்படாமை வண்ணம் அறுத்தல் என்றவாறு... 'போதார் கூந்தல் இயலணி அழுங்க / ஏதி லாட்டியை நீபிரிந் ததற்கே / அழலவிர் மணிப்பூண் நனைய / அழலா னாவெங் கண்ணே தெய்யோ!' (ஐங்குறு.232). இதனுள், 'அழலானா' என்றும், 'எங்கண்ணே' என்றும், 'தெய்யோ' என்றும் அலகிடின், குற்றப்பட நிற்கும், ஆசிரியம் முச்சீரால் இறுக என்னும் ஓத்து இலாமையின்; அதனை வகையுளி சேர்த்தி, முதற்சீரைப் 'புளிமா' என்னும் சீராகவும் அல்லாதன மூன்றும் 'தேமா' என்னும் சீராகவும் அலகிட்டுக் கொள்ளப் பிழையாதாம்" (யாப்.வி.நூ.95, பக்.416, 417)* என்று சான்றினையும் அதனை எவ்வாறு பொருத்திப் பார்க்க வேண்டும் என்பதையும் விருத்தியுரைகாரர் விளக்குகின்றார்.

இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் தொல்காப்பியரின் கருத்தையே விளக்க முற்பட்டுள்ளனர். இவர்களுள் இளம்பூரணர் அசை, சீர்களைக் கொண்டு வகையுளியை விளக்க, பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அசை, சீர், தளை, அடி என நான்கையும் கொண்டு விளக்கியுள்ளனர். அமிதசாகரரின் புறநடை நூற்பா கருத்தை விளக்க வரும் விருத்தியுரைகாரர் அசை, சீர், தளை, அடி,

http://Creativecommons.org//license/by/4.0/.

தொடை, வண்ணம் என ஆறு நிலைகளில் வகையுளியைப் பார்க்க முடியும் என்கிறார். இதற்குச் சில உரை மேற்கோள்களைச் சான்றுகாட்டுவதோடு, வகையுளி என்பதை விளக்குவதற்கு உரைச் சூத்திரத்தையும் அவிநயனார் வகுத்த இலக்கணத்தை யும் சுட்டுகின்றார். இவ்வுரையை அடியொற்றிச் செல்லும் *குணசாகரர் "வகையுளி என்பது: முன்னும், பின்னும், அசை முதலாகிய உறுப்புகள் நிற்புழி யறிந்து, குற்றப்படாமல் வண்ணம் அறுத்தல், எனக் கொள்க" (யா.கா.43 குணசாகரர்.)* என்கிறார். குணசாகரர் வகையுளிக்கு எந்த உறுப்புகளைக் கொள்ள வேண்டும் என்று பட்டியலிடாமல் 'அசை முதலாகிய உறுப்புகள்' என்று பொதுவாய்ச் சுட்டுகின்றார். குணசாகரர் விருத்தியுரை காட்டும் உரைச்சூத்திரத்தை முதலில் கூறி, அதன் பின்னர் உரை மேற்கோள்களைக் காட்டுகின்றார். இவற்றிற்கு இடையில் திருக்குறளைச் (3) சான்றாகத் தந்து விளக்குகின்றார். *"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் /நிலமிசை நீடுவாழ் வார் (குறள்.3). இதனை 'நிலமிசை' எனவும், 'நீடு' எனவும், 'வாழ்வார்' எனவும் அலகிடின், ஆசிரியத்தளை தட்டு, வெண்பாவின் இறுதிக்கண் அசைச்சீர் ஆகற்பாலது இயற்சீராய், 'நிகரில் வெள்ளைக்கு ஓரசைச்சீரும் ஒளிசேர் பிறப்பும் ஒண்காசும் இற்ற சீருடைச் சிந்தடியே முடிவாம்' என்னும் இலக்கணத்தோடு மாறுபடும் ஆதலின், 'நிலமிசை' எனக் கருவிளம் ஆகவும், 'நீடுவாழ்' எனக் கூவிளம் ஆகவும், 'வார்' என நாள் என்னும் நேரசைச்சீர் ஆகவும் அலகிட்டுக்கொள்க" (யா.கா.43 குணசாகரர்.)* என்கிறார்.

இளம்பூரணரும், பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் 'நிலமிசை நீடுவாழ் வார்' என்ற அடியிலுள்ள 'வாழ்வார்' என்ற சொல்லை மட்டும் எடுத்துக் கொண்டு தொல்காப்பியரின் கருத்தை விளக்கியுள்ளனர். இம்மூவரைக் காட்டிலும் சற்று நுட்பமாகக் குணசாகரர், அவ்வடி முழுவதையும் எடுத்துக் கொண்டு, தனது மூல நூலாசிரியரான அமிதசாகரரின் கருத்தை உரையில் கொண்டுவந்து விளக்கியுள்ளார். இதன்மூலம் ஒரே சான்றினை ஒவ்வொரு உரைகாரரும் விளக்க முற்படுகையில், ஒருவரைக் காட்டிலும் ஒருவர் மேம்பட்ட விளக்கத்தினை அளிக்கின்றனர்.

யாப்பு

யாப்பு என்ற சொல்லுக்குப் பல பொருள் உண்டு. யாத்தல், கட்டுதல் என்ற வேரினின்று யாப்பு என்ற சொல் தோன்றியது. யாப்பு என்ற சொல்லைப் பாவோடும் தொடையோடும் இணைத்துத் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளார். வெண்பா யாப்பு, இரட்டை யாப்பு என்ற ஆட்சியின் மூலம் இதனை அறிந்துகொள்ளலாம். யாப்பு என்பதனைத் தனிச் செய்யுள் உறுப்பாகக் கொண்டு, அதற்குரிய வரையறையையும் விளக்கத்தினையும் தொல்காப்பியர் தருகின்றார். இதற்கு இளம்பூரணர் *"எழுத்து முதலாக அசை சீர் அடி என ஈண்டோதப்பட்ட அடியினாற்றான் குறித்த பொருளை யிறுதி யடியளவு முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பென்று சொல்வர் புலவர்" (தொல். செய்.நூ.75 இளம்.)* என்கிறார். இவ்வுறுப்பினைத் தொல்காப்பியர் கூற வேண்டியதற்கான காரணத்தையும் இளம்பூரணர் தனது உரையில் குறிப்பிடுகின்றார். *"யாதானு மொருபொருட்கட் பலசொற் றொடுத்து வழங்குங்கால் குறித்த பொருளை முடிக்க வேண்டுஞ் சொல்லே சேர்த்துக் கூறல்வேண்டும் எனவும் அது மிகாமற் குறையாமற் கூறல்வேண்டும் எனவும் இலக்கணங் கூறல் வேண்டும்" (தொல்.செய்.நூ.75 இளம்.)* என யாப்பினைத் தெளிவுபடுத்துகின்றார் இளம்பூரணர். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும், *"எழுத்து முதலாக அசையும் சீரும் ஒன்றாகத் தொடர்ந்து ஈண்டிய அடியின்கண் பாடுவோன் வைப்பக் கருதிய பொருளைப் பிறிதோரடியும் கொண்டு கூட்டாதபடி அமைத்துப்பாடுதலை அவ்வாறு பாடவல்ல புலவர்கள் யாப்பென்று*

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

சிறப்பித்துக் கூறுவர் தொல்காப்பியர்" (தொல்.செய்.நூ.78 பேரா. நச்சர்.) என்கின்றனர். மேலும் ஓர் அடியினுள் இருசீரானும், முச்சீரானும், நாற்சீரானும் குறித்த பொருளை வைத்துப்பாடி, எஞ்சிய சீரினை மேல் வருகின்ற அடியோடு பொருள் முடியச் செய்வனவும் யாப்பு என்னும் உறுப்பாகக் கொள்ளப்பெறும் என்று இருவரும் குறித்துள்ளனர். பேராசிரியர் இன்னும் சற்று நுட்பமாக யாப்பு என்ற உறுப்பினை விளக்குகின்றார். *"சொல்லிணைத்தால் சொற்றொறும் பொருள் உடையது எனினும், அடிக்கு உறுப்பாகிய எழுத்தும் அசையும் சீரும் பொருளிலவாகி வந்தால், அது யாப்பெனப்படாது என்று எதிர்மறைவாசகத்தினால் யாப்பு என்னும் உறுப்பினைப் பேராசிரியர் விளக்குவர். பொருள் தொடர்பினை அறுத்தும், குறைத்தும் அமைக்கப்படும் அடியிலும் யாப்பு உறுப்பு இல்லை என்பதும் இவர் கருத்தாகும்" (சோ.ந.கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம் - முதல்பகுதி, ப.230)* என்று பேராசிரியரின் கருத்தை எடுத்துரைக்கின்றார் சோ.ந.கந்தசாமி. யாப்பு என்ற உறுப்புக்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அகநானூற்றின் (260) பாடலைச் சான்றுகாட்டுகின்றனர். *மண்டில மழுங்க மறுநிறங் கிளர / வண்டின மலர்பாய்ந் தூத மீமிசைக் / கண்டற் கானற் குருகின மொலிப்ப (அகம்.260)/* இப்பாடல் இருசீரானும் (மண்டில மழுங்க, மறுநிறங் கிளர), முச்சீரானும் (வண்டின மலர்பாய்ந் தூத), நாற்சீரானும் (கண்டற் கானற் குருகின மொலிப்ப) குறித்த பொருளை முடிய நாட்டியது என்று விளக்குகின்றனர். நச்சினார்க்கினியர் நாலடியார், கலித்தொகை, பட்டினப்பாலை ஆகியவற்றில் இருந்து மேலும் சில சான்றுகளைக் காட்டி யாப்பு என்னும் உறுப்பினை விளக்கியுள்ளார். *"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்" எனவும், 'துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டு' (நாலடி.2) எனவும் 'அரிதாய வளநெய்தி யருளியோர்க் களித்தலும்' (பாலைக் கலி.10) எனவும், 'வசையில்புகழ் வயங்கு வெண்மீன்' (பட்டினப்.1) எனவும் இந்நால் வகைச் செய்யுட்கண் முடியுந் துணையும் அடிதோறுங் குறித்த பொருளை முடிய நாட்டியவாறு காண்க" (தொல்.செய்.நூ.78 நச்சர்.)* என்று நான்குபாக்களிலும் பொருள் முடிய வருதலைச் சான்றுகாட்டுகின்றார் நச்சினார்க்கினியர்.

அமிதசாகரர் யாப்பினைத் தனி உறுப்பாகக் கொள்ளவில்லை. *"எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கொடு / இழுக்கா நடைய தியாப்பெனப் படுமே" (யாப்.நூ.1)* என்று யாப்பிற்கு இலக்கணம் வகுத்துள்ளார். இதற்கு உரைவரைந்த விருத்தியுரைகாரர் *"எழுத்தும், அசையும், சீரும், தளையும், அடியும், தொடையும், தூக்கும் என்னும் இவ்வேழுறுப்போடும் புணர்ந்து குற்றமின்றி நடைபெறுவது 'யாப்பு' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது" (யாப்.வி.நூ.1, ப.16)* என்று குறித்துள்ளார். மேலும் இழுக்கா நடையது யாப்பு என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதற்குரிய காரணத்தையும் இவர் குறிப்பிட்டு, புறநானூற்றின் பாடலடிகளைச் சான்றுகாட்டுகின்றார். *"எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோ டியாப்பு' என்னாது, 'இழுக்கா நடைய தியாப்பெனப் படுமே,' என்றமையான், 'அவை முற்றிய ஆறு உறுப்பிற்று ஆயினும், குற்றமின்றி நடைபெறுவது 'யாப்பு' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது,' எனக் கொள்க. 'சிறப்பு என்பது எற்றாற் பெறுதும்?' எனின், 'என' என்னும் சொல்லாற் பெறுதும். அது சிறப்பினைக் கூறுமோ?' எனின், கூறும்; என்னை? 'நளியிரு முந்நீர் ஏணி யாக' (புறம்.35:1) என்னும் புறப்பாட்டினுள், 'முரசுமுழங்கு தானை மூவி ருள்ளும் / அரசெனப் படுவது நினதே பெரும!' (புறம்.35:4,5) எனவும், 'ஆடுகழைக் கரும்பின் வெண்பூ நுடங்கும் / நாடெனப் படுவது நினதே யத்தை' (புறம்.35:10,11) எனவும் சிறப்புப் பற்றிப் புணர்த்தார் சான்றோர் ஆகலானும், 'நாடெனப்படுவது சோழநாடு / ஊரெனப்படுவது உறையூர்' என்று பரவை வழக்கினுள்ளும் சிறப்பத்துச் சொல்லுவார் ஆகலானும் எனக் கொள்க. எனவே, எழுத்துக் குற்றம் முதலாக உடைய செய்யுள் 'யாப்பு' என்று கூறப்படாது என்பது பெறப்பட்டதாயிற்று எனக் கொள்க" (யாப்.வி. நூ. 1,பக்.16, 18)* என்று குறிப்பிட்டுள்ளார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

யாப்பு என்பதற்குத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் தருகின்ற விளக்கங்கள் ஒத்தமைகின்றன. பேராசிரியர் அகநானூற்றின் ஒரு பாடலை மட்டும் சான்று காட்ட, நச்சர் பேராசிரியர் காட்டும் சான்றோடு, நால்வகைப்பாக்களில் இருந்தும் சான்று காட்டுகின்றார். விருத்தியுரைகாரர் எழுத்துக் குற்றம் முதலாக உடைய செய்யுள் யாப்பு என்று ஏற்றுக்கொள்ளப்படாது என்று கூறி, 'என' என்னும் சொல்லால் பெறும் சிறப்பைக் கொண்டு யாப்பினை விளக்குகின்றார்.

யாப்பு என்பது பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என ஏழு வகைப்படும் என்கிறார் தொல்காப்பியர் (நூ.75). இது சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்க்கும் உரியதாகும். 'குறித்த பொருளை அடிக்கண் முடிய நாட்டுதலேயன்றி இவ்வேழுவகையாகச் செய்தலும் யாப்பு என்னும் உறுப்பாகும்' என்கின்றனர் தொல்காப்பிய உரையாசிரியர்கள். இளம்பூரணர் குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலைச் சான்றுகாட்டி யாப்பு உறுப்பை விளக்கியுள்ளார். "*தாமரை புரையுங் காமர் சேவடிப் / பவளத் தன்ன மேனித் திகழொளிக் / குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின் / நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற் / சேவலங் கொடியோன் காப்ப / ஏம வைகல் எய்தின்றால் உலகே" (குறுந். கடவுள் வாழ்த்து.).* இதனுட் குறித்த பொருள் முருகவேள் காப்ப உலகங் காவறப்பட்டது என்னும் பொருள். இதனை முடித்தற்பொருட்டு எழுத்து முதலாகி வந்து ஈண்டிய அடிகளெல்லா வற்றானும் நாட்டியவாறு கண்டுகொள்க" (தொல்.செய்.நூ.75 இளம்.) என்று தனது மேற்கோளை நிறுவுகின்றார் இளம்பூரணர்.

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலை இரண்டு இடங்களில் யாப்பின் வெவ்வேறு கூறுகளை விளக்கப் பயன்படுத்தியுள்ளார். ஒரு செய்யுளில் தொடை, தளை பல விரவி வருகின்ற இடத்து முதலில் வந்த தொடை, தளையின் பெயரைக் குறிப்பிட்டு அழைக்கப் படுவதற்கும் (யாப்.வி.நூ.53, பக்.209), மகர, வகரகள் எதுகையாதலுக்கும் (யாப்.வி.நூ.53, பக்.215) சான்றாகக் கொண்டுள்ளார் விருத்தியுரைகாரர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம், ஆனந்தம் முதலிய குற்றங்கள் நீங்கிய செய்யுளுக்குக் குறுந்தொகையின் கடவுள்வாழ்த்துப் பாடலைச் சான்று காட்டுகின்றார் குணசாகரர் (யா.கா.44 குணசாகரர்.).

இளம்பூரணரால் யாப்பின் வகைக்குச் சான்றுகாட்டப்பட்ட குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடல், விருத்தியுரைகாரரால் எதுகைகளுக்கும், குணசாகரரால் குற்றம் தீர்ந்த பாட்டிற்கும் சான்றுகாட்டப்பட்டுள்ளது. ஒரு பாடலையே உரையாசிரியர்கள் வேறு வேறு யாப்பின் கூறுக்குச் சான்றுகாட்டியுள்ளமையை இதன்வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

பா

இளம்பூரணர் பா என்னும் செய்யுள் உறுப்பிற்கு விளக்கம் தரவில்லை. ஆனால் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அரிய விளக்கத்தைத் தந்துள்ளனர். *"பா என்பது, சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லுஞ் தெரியாமற் பாடமோதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற் கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை" (தொல்.செய்.நூ.1 பேரா., நச்சர்.).* தொல்காப்பிய மூலத்தில் இதற்கான விளக்கம் இல்லாத நிலையில் உரையாசிரியர்களே பா என்பதற்கான நுண்ணிய விளக்கத்தைத் தந்துள்ளனர். இளம்பூரணர் பாவினை நான்காக வகைப்படுத்தியுள்ளார். ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்பன (தொல்.செய்.நூ.101 இளம்.). பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இவ்வாறு வகைப் படுத்துவதோடு ஆசிரியப்பா உறுப்பாகி வந்த செய்யுள், வஞ்சிப்பா உறுப்பாகி வந்த

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

செய்யுள், வெண்பா உறுப்பு வந்த செய்யுள், கலிப்பா உறுப்பு வந்த செய்யுள் என்று காட்டுகின்றனர் (தொல். செய்.நூ.105 பேரா., நச்சர்.). இதற்கு ஐங்குறுநூறு (தனிப் பாடல்.2), பட்டினப்பாலை (1, 2), முத்தொள்ளாயிரம் (71), கலித்தொகை (11) ஆகிய சங்க நூல்களிலிருந்து சான்றினைத் தருகின்றனர். பேராசிரியர் காட்டியுள்ள ஐங்குறுநூற்றுப் பாடலின் இரண்டாவதடி ***அலங்குதலை*** *ஈந்தின் சிலம்பொதி செங்காய்* என்றும் முத்தொள்ளாயிரப் பாடலின் முதலடி *வாரிய பெண்ணை* ***வருகுரும்பை*** *வாய்த்தனபோல்* என்றும் உள்ளன. இவற்றில் 'அலங்குதலை', 'வருகுரும்பை' ஆகிய சீர்கள் பாட வேறுபாடுகளாகக் கொள்வதற்குரியன. ஐங்குறுநூற்றின் இப்பாடலடியைப் பேராசிரியர் பிற இடங்களில் சான்றுகாட்டும்போது 'அலங்குதலை' என்னும் சீருக்கு மாற்றாக 'அலங்குகுலை' என்ற சீரைப் பயன்படுத்துகின்றார். இப்பாடவேறுபாடு கழக வெளியீடாக வந்த தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியருரைப் பதிப்பிலும், க.வெள்ளைவாரணனின் தொல்காப்பியச் செய்யுளியல் உரைவளப் பதிப்பிலும் காணப்படுகின்றது. விருத்தியுரையிலும், குணசாகரருரையிலும், ஆ.சிவலிங்கனாரின் தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளப் பதிப்பிலும், கணேசையரின் தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியர் உரை பதிப்பிலும் உ.வே.சா.வின் ஐங்குறுநூற்று பதிப்புகளிலும் (முதற்பதிப்பு:1903, ஐந்தாம் பதிப்பு: 1957) 'அலங்குகுலை' என்ற சீரே இடம்பெறுகிறது. இவ்வாறு இருநிலைகளில் காணப்படும் பாடம் பாடவேறுபாட்டு ஆய்வுக்கு வழி வகுக்கின்றது. அதுபோல் முத்தொள்ளாயிரப் பாடலில் பேராசிரியர் காட்டும் 'வருகுரும்பை' என்னும் பாடம் நச்சினார்க்கினியர் உரையில் 'வளர்குரும்பை' என்றுள்ளது. ரா.இராகவையங்கார் பரிசோதித்து வெளியிட்ட முத்தொள்ளாயிர நூற் பதிப்பில் பேராசிரியர் காட்டும் பாடமே உள்ளது (முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், ப. 15).

ஐங்குறுநூற்றின் தனிப்பாடலில் இடம்பெற்றுள்ள "உள்ளார் கொல்லோ தோழி" (2) என்னும் இப்பாடலடியைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தூக்கு (நூ.87), ஒரூஉ எதுகை (நூ.93) ஆகியவற்றிற்கும் சான்றாகக் காட்டுகின்றனர். பேராசிரியர் தாஅ வண்ணத்திற்கும் இப்பாடலின் முதலடியைச் சான்று காட்டியுள்ளார்; தூக்கிற்குப் பாடலின் முதலிரு அடிகளைக் காட்டுகின்றார். நச்சினார்க்கினியர் பாடலின் முதலடியை மட்டுமே தூக்கு, ஒரூஉ எதுகை இரண்டிற்கும் சான்றாகக் காட்டியுள்ளார். விருத்தியுரைகாரர் சிறப்புடை ஆசிரியத்தளைக்கும் (யாப்.வி.நூ.19. ப.92), குணசாகரர் நேரொன்றாசிரியத் தளைக்கும் (யா.கா.11 குணசாகரர்.) பாடல் முழுவதையும் சான்று காட்டுகின்றனர். ஐங்குறுநூற்றின் ஒரு பாடலை யாப்பின் வேறுவேறு கூறுக்கு உரையாசிரியர்கள் சான்று காட்டியுள்ளனர் என்பதை இதன்மூலம் அறிந்துகொள்ளலாம். இளம்பூரணர் ஐங்குறு நூற்றின் பாடல்களையோ, பாடலடியையோ தொல்காப்பியச் செய்யுளியலின் உரையில் எங்கும் எடுத்தாளவில்லை என்பது இங்குத் தனித்துச் சுட்டத்தக்கது. நால்வகைப் பாவில் அகவற்பா குறித்த உரையாசிரியகளின் கருத்துகளையும் செவ்விலக்கிய சான்றுகளையும் குறித்து இங்கு ஆராயப்படவுள்ளது.

ஆசிரியப்பா

ஆசிரியப்பாவிற்கான இலக்கணத்தைத் தொல்காப்பியர் தெளிவாகச் சுட்டுகின்றார். அதன் வகைகள் குறித்து வெளிப்படையாய்க் கூறவில்லை. பிற்கால யாப்பிலக்கணிகள் நேரிசை, இணைக்குறள், நிலைமண்டிலம், மண்டிலம் என நான்காக ஆசிரியப்பாவினை வகைப்படுத்தினர். ஆசிரியப்பாக்களின் வகைப் பெயர்கள் தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இல்லாத காரணத்தினால் இவற்றைப் பெயரிட்டு அழைக்கவில்லை. வழக்கில் இருந்திருந்தால் தொல்காப்பியர் அவற்றைச் சுட்டியிருப்பார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆசிரியப்பாவின் முதல் மூன்றுவகைகள் பாவில் பயிலும் அடியினைக் கொண்டு வழங்கப்படும் பெயர்களாகும். நான்காம் வகை அடிகளின் அமைப்புடன் பொருள் கொள்ளல் முறையில் பெயர் சுட்டப்படுவதாகும். காக்கைபாடினியார், சிறுகாக்கை பாடினியார், அவிநயனார், மயேச்சுரர், அமிதசாகரர் ஆகியோர் ஆசிரியப்பா வின் நால்வகைகளுக்கும் இலக்கணம் வகுத்துள்ளனர். அதற்கான சான்று களை விருத்தி யுரையும் குணசாகரருரையும் எடுத்துக்காட்டியுள்ளன. இவற்றைப் பயின்ற இளம்பூரணர் தொல்காப்பியரும் இக்கருத்தினை உணர்த்தியிருக்க வேண்டும் என்று எண்ணி உரை வகுத்துள்ளார் (தொல்.செய்.நூ.65,66 இளம்.). பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் ஒருநிலையில் உடன் பட்டும் ஒருநிலையில் உடன்படாமலும் வேண்டியவாறு விளக்கம் கூறுகின்றனர் (தொல்.செய்.நூ.69 பேரா., நச்சர்.). வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அணுகினால் இந்நால் வகைப்பாக்களும் படிப்படியாகத் தோன்றியிருக்க வேண்டும். இந்நால்வகையில் சில வகையே நிலை பெற்றன; ஏனையவை நிலைபெறாமல் பெயரளவில் மட்டும் நின்றன என்பது தெளிவாகப் புலனாகின்றது. இதனைச் சங்க இலக்கியத்தில் காணப்படும் ஆசிரியப்பாக்கள் உறுதிப்படுத்துகின்றன. அதிலும் குறிப்பாக நேரிசை ஆசிரியமே மிகுதியாகக் காணப்படுகின்றது. அடுத்த நிலையில் நிலை மண்டிலமும் அருகிய நிலையில் இணைக்குறளாசிரியரும் காணப்படுகின்றன.

ஈற்றயலடி முச்சீரான் வருவது நேரிசை ஆசிரியப்பா; முதலடியும் ஈற்றடியும் நாற்சீராய் இடையடிகள் இருசீரானும் முச்சீரானும் வருதல் இணைக்குறள் ஆசிரியப்பா; எல்லா அடியும் அளவொத்து வருதல் நிலைமண்டில ஆசிரியப்பா; எல்லா அடியும் முதல், நடு, இறுதியாக உச்சரிப்பினும் ஓசையும், பொருளும் பிழையாது வருவது அடிமறிமண்டில ஆசிரியப்பா வாகும். இளம்பூரணர் நிலைமண்டில ஆசிரியப்பாவுக்குக் குறுந்தொகையை யும் (18), அடிமயங்கு ஆசிரியப்பாவுக்குப் புறநானூற்றையும் (235), வெள்ளடி விரவிய ஆசிரியத்துக்குக் குறுந்தொகையையும் (12), வஞ்சியடி விரவிய ஆசிரியத்துக்குப் புறநானூற்றையும் (363) சான்றுகாட்டுகின்றார். பேராசிரியர் ஆசிரியப்பாவில் ஈற்றயலடி முச்சீரடியாக வருதலுக்கும், இடையிலும் முச்சீரடி, இருசீரடி வருதலுக்கும் முறையே புறநானூற்றின் (1, 235, 236) பாடல்களைச் சான்றுகாட்டி விளக்குகின்றார் (தொல்.செய். நூ.67 பேரா.). நச்சினார்க்கினியர் ஈற்றயலடி முச்சீராக வருதலுக்குக் குறுந்தொகையையும் (3), இருசீராக வருதலுக்குப் புறநானூற்றையும் (235) சான்றுகாட்டுகின்றார். 'சிறியகட் பெறினே' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் வரும் 'பெரியகட் பெறினே' என்னும் சொற்சீரடியைப் பின்பு நூல்செய்தோர் குறளடியாக்கி, இணைக்குறள் ஆசிரியப்பாவாகக் கொள்வர் என்று குறிப்பிட்டுள்ளார் நச்சினார்க்கினியர் (தொல். செய்.நூ.67 நச்சர்.). மேலும் மண்டில யாப்பு பற்றிக் கூறவரும் நச்சினார்க்கினியர், *"இனி நாற்சீரடியாய் வரும் ஆசிரியமும் வெண்பாவும் ஈற்றயலடியும் ஈற்றடியும் முச்சீராய் வருதென முன்விதித்தவை ஒருகால் நாற்சீரடியாயும் வருமென்றற்கு மண்டிலயாப் பென்றார்; அது மண்டிலவாசிரியப் பாவும் மண்டில வெண்பாவுமாம்" (தொல்.செய். நூ.115 நச்சர்.)* என்று குறிப்பிட்டுள்ளார். இவற்றோடு மண்டில ஆசிரியப்பாவுக்குக் குறுந்தொகையையும் (18), குட்டம் பட்ட ஆசிரியப்பாவுக்குப் புறநானூற்றையும் (2) நச்சினார்க்கினியர் சான்றுகாட்டுகின்றார். விருத்தியுரைகாரர் நேரிசை ஆசிரியப் பாவிற்குக் குறுந்தொகையையும் (119), இணைக்குறள் ஆசிரியப்பாவிற்குப் புறநானூற் றையும் (235), நிலைமண்டில ஆசிரியப்பாவிற்குக் குறுந்தொகையையும் (18) சான்று காட்டுகின்றார் (யாப்.வி.பக்.285,287,290-291). குணசாகரர் நேரிசை ஆசிரியப்பா விற்குக் குறுந்தொகையையும் (3), இணைக்குறள் ஆசிரியப்பாவிற்குப் புறநானூற்றையும் (235), நிலைமண்டில ஆசிரியப்பாவுக்குக் குறுந்தொகையையும் (18) சான்றுகாட்டுகின்றார் (யா.கா.28 குணசாகரர்.). தொல்காப்பிய

http://Creativecommons.org//license/by/4.0/.

உரையாசிரியர்களும், விருத்தியுரைகாரரும், குணசாகரரும் ஆசிரியப்பாவின் வகைகளைக் கூறுவதிலும் சான்றுகாட்டுவதில் ஒன்றுபட்டு இருப்பதை இதன் மூலமும் அறிய முடிகின்றது.

செய்யுளின் அகத்துறுப்புகள்

திணை, கைகோள், பொருள், துறை, கூற்று, கேட்போர், இடம், காலம் ஆகியன உள்ளடக்கத்தினைத் தீர்மானிக்கின்ற உறுப்புகள் ஆகும். மெய்ப்பாடு, எச்சம், முன்னம், மாட்டு, வண்ணம், நோக்கு ஆகியன உள்ளடக்கத்தினைப் புலப்படுத்திக் காட்டுகின்ற உறுப்புகள் ஆகும். இவற்றுள் நோக்கு என்னும் உறுப்பினைக் குறித்து மட்டும் இங்கு விளக்கப்படுகின்றது.

'மாத்திரை முதலாக அடிநிலையளவும் நோக்குதலாகிய கருவினை நோக்கு' என்கிறார் தொல்காப்பியர். தொல்காப்பியரின் நோக்கு கோட்பாடு எத்தகைய சிறப்பினைக் கொண்டது என்பதைத் தமிழண்ணல் தெளிவாக எடுத்துரைக்கின்றார். *"இக்கோட்பாடு ஒரு பாடரின் முழுமையான செம்மையைச் சுட்டுகிறது. எனவே இதனைச் 'செம்மை' (Perfection) எனச் சுட்டியிருக்கலாம். பாடலின் 'திறன்' பற்றியதாதலின் 'பாத்திறன்' எனவும் பகர்ந்திருக்கலாம். ஆயினும் நோக்குவார்க்கு ஏற்பவும் நோக்குகின்ற ஆற்றல், திட்ப நுட்பத்திற்கு ஏற்பவும் ஒரு திறன் மதிக்கப்படுதலால் பயன்கொள்ளும் சிறப்புக்கு அதிக அழுத்தம் வைத்து இக்கோட்பாட்டை 'நோக்கு' எனக் குறித்துள்ளார்" (தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைள் - நோக்கு, ப.37)* என்று குறித்துள்ளார்.

நோக்கு என்பதனை எவ்வாறு பார்க்க வேண்டும் என்றும் நோக்கு என்பது மூன்று வகைப்படும் என்றும் இளம்பூரணர் குறிப்பிடுகின்றார். *"யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நிற்குநிலை. அடிநிலைகாறும் என்றதனால் ஓரடிக்கண்ணும் பலவடிக்கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒரு நோக்காக ஓடுதலும் பல நோக்காக ஓடுதலும் இடையிட்டு நோக்குதலும் என மூன்றுவகைப்படும்" (தொல்.செய்.நூ.100 இளம்.)* என்று நோக்கினை இளம்பூரணர் விளக்குகின்றார். மேலும் ஒரு நோக்காக ஓடியதற்கும் பல நோக்க ஓடியதற்கும் முறையே நாலடியாரின் (1, 172) பாடல்களைச் சான்று காட்டுகின்றார். முதல்பாடல் செல்வம் நிலையாமை என்ற ஒரு நோக்கையே கொண்டது. 'அறமின் அறநெறி, அஞ்சுமின் கூற்றம்' என்ற இரண்டாவது பாடல் பல பொருள்களை நோக்கிப் பாடப்பட்டதால் பல நோக்குடையது. இடையிட்டு நோக்காக ஓடியதற்குத் திருமுருகாற்றுப்படையைச் (1-6) சான்றுகாட்டியுள்ளார். இப்பாடலடிகளில் வரும் 'அவிர் ஒளி' என்ற அடைமொழி அடுத்துவரும் அடிகளில் உள்ள 'நோன்தாள்', 'தடக்கை' என்பவற்றில் ஒன்றினை நோக்காது அவற்றினைச் சார்ந்துவரும் அடியில் உள்ள 'கணவனை' என்ற முதற்பொருளுடன் இயைந்து தருவதால் இடையிட்டு நோக்கிற்று என்பர் இளம்பூரணர்.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அகநானூற்றின் 'முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு' (அகம்.4) எனத் தொடங்கும் பாடலை நோக்கிற்குச் சான்றுகாட்டி, இப்பாடல் எவ்வாறு பொருந்துகின்றது என்பதை நுட்பமாகத் தெளிவுபடுத்துகின்றனர். (தொல்.செய்.நூ.104 பேரா., நச்சர்.) இலக்கிய உரையாசிரியரைப் போல இருவரும் இப்பாடலின் பொருளை விளக்கிச் செல்கின்றனர். பேராசிரியரின் உரையோடு ஒத்துச் செல்லும் நச்சினார்க்கினியர் ஒன்றிரண்டு இடங்களில் கூடுதலான விளக்கத்தினைத் தருகின்றார். 'புலம்பு புறக்கொடுப்ப' என்பதற்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் பேராசிரியரின் உரையில் இல்லாமல், இவர் கூடுதலான விளக்கத்தைத் தந்துள்ளார். "பூத்த பொங்கர்த் துணையொடு

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

வதிந்த, தாதூண் பறவை அஞ்சி' என்பதற்குப் பேராசிரியரின் உரையைக் காட்டிலும் வலிந்து பொருள் காண்கிறார்.

நோக்கு என்பதற்கு இளம்பூரணர் மூன்று நிலைகளில் விளக்கம் தந்து சான்று காட்டுகின்றார். பேராசியரியரும் நச்சினார்க்கினியரும் ஒரே பாடலைச் சான்று காட்டி ஒருவரினும் ஒருவர் சற்று கூடுதலான விளக்கத்தைத் தருகின்றனர்.

எண் வகை வனப்புகள்

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எண்வகை வனப்புகள் குறித்துத் தொல்காப்பியர் முதல் நூற்பாவிலேயே குறிப்பிட்டுள்ளார். இதற்கு விளக்கம் தரும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் முப்பத்துநான்கு செய்யுள் உறுப்புகளுள் இவ்வெட்டினை யும் தனியாகக் கொள்ள வேண்டும் என்கின்றனர். பிற்கால இலக்கணிகள் ஒழிபியல் பகுதியில் இவ்வனப்புகளைக் குறித்துப் பேசுகின்றனர்.

அம்மை

சின்மென் மொழியால் சீர்புனைந்து யாக்கப்படுவது; அடிநிமிர்வு இல்லாதது அம்மை என்னும் வனப்பாகும் என்பார் தொல்காப்பியர் (நூ.227). இதற்கு உரையியற்றிய இளம்பூரணர் *"சிலவாய் மெல்லியவாகிய மொழியினானே தொடுக்கப்பட்ட அடிநிமிர் வில்லாத செய்யுள் அம்மையாம்" (தொல்.செய். நூ.227 இளம்.)* என்று விளக்கந் தந்து திருக்குறளைச் (315) சான்று காட்டுகின்றார். விருத்தியுரைகாரரும் இச்சான்றைத் தந்துள்ளார். பேராசிரியர் *"சிலவாய மெல்லியவாய சொல்லோடும் இடையிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடும் அடிநிமிர்வில்லது அம்மையாம். அடிநிமிராதெனவே அம்மையென்பது முழுவதும் ஒரு செய்யுளாகல் வேண்டும்: வேண்டவே, அஃது உறுப்பன்றாகிய சொல்லும்; அதனை உறுப்பெனல் வேண்டுமாதலான் அடிநிமிரா தெனப்பட்ட செய்யுள் உறுப்பாக அவை பல தொடர்ந்து முடிந்து ஈண்டுச் செய்யுளா மென்பது. சிலவாகவென்பது, எண்ணுச் சுருங்குதல், மெல்லியவாதல், சிலவாகிய சொற்கள் எழுத்தினான் அகன்று காட்டாது சிலவெழுத்தினான் வருவது. அடிநிமிரா தென்றது, ஐந்தடியின் ஏறாதென்ற வாறு. தாய பனுவலோடென்றது அறம் பொருளின் பமென்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுப (போன்று) வேறிடையிடை அவையன்றியுந் தாய்ச் செல்வதென்றவாறு. அஃதாவது, பதினெண்கீழ்க்கணக் கெனவுணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோ செய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம் பொருளின்பமென அவற்றுக்கு இலக்கணங் கூறிய பாட்டுப் பயின்று வருமாறுங் கார்நாற்பது, களவழி நாற்பது முதலாயின வந்தவாறுங் கண்டு கொள்க." (தொல்.செய்.நூ. 235 பேரா.)* என்று விளக்கந் தந்து திருக்குறளைச் (675,1112) சான்றாகத் தருகின்றார். இவ்வுரையை அடியொற்றிச் செல்லும் நச்சினார்க்கினியர் ஆசாரக்கோவையில் (தற்சிறப்புப் பாயிரம்) இருந்து மேலும் ஒரு சான்றினைத் தந்து அம்மையை விளக்கியுள்ளார். மேலும் கார்நாற்பது, களவழிநாற்பது முதலிய நூல்களையும் நூற் பெயரளவில் சான்றுகாட்டுகின்றனர்.

அழகு

http://Creativecommons.org//license/by/4.0/.

அழகு என்னும் வனப்பினைத் 'திரிசொற் பயிலாது செய்யுளுட் பயின்று வரும் மொழிகளாற் சீரறுத்துப் பொலிவுபட்ட யாப்பின் பொருள் அழகு' என்று பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் குறிப்பிடுகின்றனர் (தொல்.செய்.நூ.236 பேரா., நச்சர்.). இதற்குரிய சான்றினைத் தமது உரையின் மூலமாகவே இருவரும் குறித்துள்ளனர். *"அவ்வகை' யென்றதனால் அவை வேறு வேறு வந்த ஈண்டிய தொகைநிலைச் செய்யுளென்றவாறு. அவையாவன. நெடுந்தொகை முதலாகிய தொகையெட்டு மென்றவாறு. அழகு செய்யுண் மொழியென்ற தென்னையெனின், அது பெரும்பான்மையாற் கூறினான். அம்மொழி யானே இடைச்சங்கத்தாருங் கடைச்சங்கத்தாரும் இவ்விலக்கணத் தாற் செய்யுள் செய்தார்; இக்காலத்துச் செய்யினும் விலக்கின்றென்பது" (தொல்.செய்.நூ.236 பேரா., நச்சர்.).* அழகு என்னும் வனப்பிற்கு நெடுந்தொகை முதலாகிய எட்டுத்தொகை நூல்கள் என்றும் இவற்றை இடைச்சங்கத்தாரும் கடைச்சங்கதாரும் செய்தனர் என்றும் குறிப்பிடுள்ளனர்.

தொன்மை

பழமை நிகழ்ச்சியைப் பொருளாகக் கொண்டு உரையொடு பொருந்தி வருவது தொன்மை என்னும் வனப்பாகும். இதற்குரிய சான்றினை இளம்பூரணர் (நூ.227) இராம சரிதம், பாண்டவ சரிதமம் முதலியவற்றின் மேல் வரும் செய்யுள் என்பார். பேராசிரியர் (நூ.237) பெருந்தேவனார் பாரதம் தகடூர் யாத்திரை போல்வன என்பார். நச்சினார்க்கினியர் (நூ.237) பேராசிரியர் கூறுவதோடு சிலப்பதிகாரத்தினையும் இணைத்துக் காட்டுகின்றார்.

தோல்

தோல் என்னும் வனப்பினை இளம்பூரணர் *"இழுமென்மொழியால் விழுமிய பொருளைக் கூறினும் பரந்த மொழியினால் அடி நிமிர்ந்து ஒழுகினும் தோல் என்னும் செய்யுளாம்"* என்று கூறி மலைபடுகடாமை (1) சான்றுகாட்டுகின்றார். இந்நூலின் மற்றொரு பெயரான கூத்தராற்றுப்படை என்னும் பெயரை இளம்பூரணர் இங்குக் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வனப்பிற்கு விருத்தியுரைகாரரும் இப் பாடலடியைச் சுட்டுகின்றார்.

விருந்து

பேராசிரியர் விருந்துதானும் புதிதாகத் தெடுக்கப்படும் தொடர் நிலை மேற்று' என்று விளக்கந் தந்து, இதற்குரிய சான்றினை *"முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க. கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப" (தொல்.செய்.நூ.239 பேரா.,நச்சர்.)* என்று காட்டுகின்றனர். இவ்வுரையையும் சான்றினையும் நச்சினார்க்கினியரும் பின்பற்றுகின்றார்.

இயைபு

பேராசிரியர், *"ஞ ண ந ம ன, ய ர ல வ ழ ள வென்னும் பதினெரு புள்ளியீற்றினுள் ஒன்றனை இறுதியாகச் செய்யுஞ் செய்யுள் பொருட்டொட ராகவுஞ் சொற்றொடராகவுஞ் செய்வது இயைபெனப்படும்"* என்று விளக்கம் தருகின்றார் (தொல்.செய்.நூ.240 பேரா.). செவ்விலக்கிய நூல்களுள் தொடர் நிலைச் செய்யுளாக அமைந்தவை இரண்டு. ஒன்று சிலப்பதிகாரம். மற்றொன்று மணிமேகலை. இவற்றுள் சிலப்பதிகாரத்தினை யாப்பின் பல கூறுகளுக்கு உரையாசிரியர்கள் சான்றுகாட்டியுள்ளார். இவற்றைச்

http://Creativecommons.org//license/by/4.0/.

'சிலப்பதிகார யாப்பமைதி' ஆய்வு என்னும் நூலில் தனி இயல் அமைந்து ந.வீ.செயராமன் விரிவாகப் பதிவு செய்துள்ளார். ஆனால் சிலப்பதிகாரத்தோடு ஒத்த மணிமேகலையின் செய்யுட்களை உரையாசிரியர்கள் எங்கும் உரைகளில் எடுத்தாளவில்லை. ஆனால் நூலின் பெயரை மட்டுமே குறிப்பிட்டு விளக்கிச் செல்கின்றனர். அவற்றுள் ஓரிடம் இயைபு என்னும் வனப்பிற்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தரும் சான்று. இங்குப் பேராசிரியர் நூலினை இயற்றிய ஆசிரியர் பெயரோடு குறிப்பிட, நச்சினார்க்கினியர் நூற்பெயரை மட்டும் குறிப்பிட்டு சான்றுகாட்டுகின்றார். பேராசிரியர் *"இயைபென்றதனான் பொருளும் இயைந்து சொல்லும் இயைந்து வருமென்பது கருத்து; சீத்தலைச் சாத்தனராற் செய்யப் பட்ட மணிமேகலையுங் கொங்குவேளிராற் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளுங் போல்வன. அவை னகார ஈற்றான் இற்றன. மற்றையீற்றான் வருவனவற்றுக்கும் ஈண்டிலக்கணம் உண்மையின் இலக்கியம் பெற்றவழிக் கொள்க. இப்பொழுது அவை வீழ்ந்தனபோலும்" (தொல்.செய்.நூ.240 பேரா.)* என்று விளக்கியுள்ளார். நச்சினார்க்கினியர் *"இயைபென்றதனானே பொருளியைதல் பெற்றாம். பரந்த மொழிய வடிநிமிர்ந்த தோல் உயிரீற்றவாயே வரும். னகரவீற்றா, னிற்றுப் பொருடொடர்ந்தன மணிமேகலையும், உதயணன்கதையும், ஒழிந்தவொற்றுக்களுக்கும் இலக்கண முண்மையின் இலக்கியம் இக்காலத்து வீழ்ந்தன போலும். எனப்படுவதென்றதனான் இக்காலத்தார் கூறும் அந்தாதிச்சொற் றொடருங் கொள்க" (தொல்.செய்.நூ.240 நச்சர்.)* என்று அந்தாதிச் செய்யுளைச் சேர்த்துக் குறிப்பிடுகின்றார்.

இழைபு

தொல்காப்பியர் குறிப்பிடும் இழைபின் இலக்கணத்தை விளக்கும்போது இளம்பூரணர், விருத்தியுரைகாரர், குணசாகரர் ஒரு வகையாகவும், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஒருவகையாகவும் உள்ளனர். விருத்தியுரையும் (யாப்.வி.ப.421) குணசாகரருரையும் (யா.கா.43 குணசாகரர்.) *"வல்லொற்று யாதும் தீண்டாது செய்யுளியலுடையாரால் எழுத்தெண்ணி வகுக்கப்பட்ட குறளடி முதலாப் பதினேழ் நிலத்து ஐந்தடியும் முறையே உடைத்தார் ஓங்கிய சொற்களால் வருவது இழைபு"* என்று குறிப்பிடுகின்றனர். இளம்பூரணர் தொல்காப்பியரின் அடிக்கோட்பாட்டின் அடிப்படையில் இழைபிற்கான இலக்கணத்தை விளக்குகின்றார். *"ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்தடக்காது ஆசிரியப்பாவிற்கோதப்பட்ட நாலெழுத்தாதியாக இருபதெழுத்தின் காறும் உயர்ந்த பதினேழு நிலத்தும் ஐந்தடியும் முறையானே வரத்தொடுப்பது இழைபு என்னும் செய்யுளாம்" (தொல்.செய்.நூ.234 இளம்.)* என்று குறிப்பிடுகின்றார். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அடியமைப்பிலும் மொழியமைப்பிலும் விளக்கந் தந்து சான்று காட்டுவதில் வேறுபடுகின்றனர். *"ஒற்றொடு புணர்ந்த வல்லெத்து அடக்காது ஒற்றடுத்த வல்லெழுத்துப் பயிலாது; குறளடி முதலா ஐந்து அடி ஒப்பித்து இருசீரடி முதலாக எழுசீரடியளவும் வந்த அடி ஐந்தனையும் ஒப்பித்து: ஒப்பித்தலென்பது, பெரும்பான்மையான் நாற்சீரடி படுக்கபட்டென்றவாறு. ஓங்கிய மொழியான் நெட்டெழுத்தும் அந்நெட்டெழுத்துப்போல் ஓசை எழும் மெல்லெழுத்தும் லகரா ளகாரங்களும் உடைய சொல்லான்: ஆங்ஙனம் ஒழுகின் இவையும் ... அவையாவன, கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தனவென்பது. இவற்றுக்குக் காரணந் தேர்தல் வேண்டாது பொருள் இனிது விளங்கல் வேண்டுமென்றது, அவிநயத்திற்கு உரியவாதல் நோக்கி யென்பது மற்றிதனை வெண்டுறைச் செய்யுட்முன் வைப்பினென்னெனின் இஃதிசைப்பாட்டாகலின் இனி வருகின்றது. இசைத்தமிழாகலின் அதற்குபகாரப்பட இதனை, இறுதிக்கண் வைத்தானென்பது" (தொல்.செய்.நூ.242 பேரா., நச்சர்.)* என்று கலித்தொகையையும் பரிபாடலையும் இழைபிற்குச் சான்று காட்டுகின்றனர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எண்வகை வனப்புகளுக்கு மேற்கோள் காட்டுவதில் செவ்விலக்கியங்களின் பாடல்களையும், நூலின் பெயரையும் பயன்படுத்தியுள்ளனர்.

தொகுப்பாக

- தமிழ்மொழியில் வளமான இலக்கண உரைமரபு உண்டு. இறையனார் களவியல் தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரை இவ்வுரை மரபின் நீட்சியினையும் செழுமையினையும் காணமுடியும். குறிப்பாக யாப்பிலக்கண உரைமரபு மேலும் தொன்மை வாய்ந்ததாகவும் சிறப்பானதாகவும் அமைந்திருக்கின்றது.
- உரைமரபு என்பது மூலநூலாசிரியனின் கருத்தை விளக்குதல் என்பதைக் கடந்து பல செய்திகளைச் சமகால மாணவர்களுக்கு அளிப்பதாக உள்ளது. இதற்கு மிகச்சிறந்த சான்றாக அமைவது யாப்பருங்கலத்திற்கு எழுந்த விருத்தியுரை. தனக்கு முன் எழுந்த வளமையான யாப்பிலக்கண மரபிற்கான தனிப்பெரும் கலைக்களஞ்சியமாக யாப்பருங்கல விருத்தியுரை திகழ்கின்றது.
- யாப்பருங்கல விருத்தியுரைக்கும் யாப்பருங்கலக்காரிகைக்கு எழுந்த குணசாகரருரைக்கும் பின்னரே தொல்காப்பியத்திற்கு உரைஎழுதுகின்ற முயற்சி (முழுமையும், குறிப்பாகச் செய்யுளியல்) இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோரால் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் கணிசமான அளவிற்கு யாப்பருங்கல விருத்தியுரையின் தாக்கம் இவர்களின் உரையில் ஊடாடியுள்ளது. இருப்பினும் தொல்காப்பியத்தின் பழமையைப் போற்றுகின்ற பண்பினை இவர்களின் உரையில் பரக்கக் காண முடிகின்றது.
- ஏறக்குறைய பத்து நூற்றாண்டுகளின் இடைவெளியில் தொல்காப்பியச் செய்யுளியலுக்கு உரை எழுதுகின்ற உரைகாரர்கள் அதுவரை தமிழ் இலக்கிய, இலக்கண உலகில் நிகழ்ந்துள்ள அனைத்துவித மடைமாற்றங் களையும் உட்செரித்தே உரை எழுதுகின்றனர். இருப்பினும் தொல்காப்பிய விதிகளை விளக்க மிகுதியான அளவிற்கு அவர்கள் சான்றுகாட்டுவது செவ்விலக்கியப் பிரதிகளையே.
- இளம்பூரணர் செய்யுளியலில் மட்டும் 72 எட்டுத்தொகைப் பாடல்கள், பத்துப்பாட்டில் (மலைப்படுகடாம் 2 அடிகள், பெரும்பாணாற்றுப்படை 1 அடி, மதுரைக்காஞ்சி 1 அடி, திருமுருகாற்றுப்படை 6 அடிகள், பட்டினப்பாலை 6அடிகள்) 16 அடிகளைச் சான்று காட்டியுள்ளார். 43 பதினெண்கீழ்க்கணக்கு பாடல்களையும் முத்தொள்ளாயிரத்தின் ஒரு பாடலையும் சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர் குரவை, கானல்வரி பகுதிகளையும் சான்று காட்டி தொல்காப்பியச் செய்யுளியல் விதிகளை விளக்கியுள்ளார்.
- பேராசிரியர் செய்யுளியலில் மட்டும் 236 எட்டுத்தொகை பாடல்களைச் சான்று காட்டியுள்ளார். பத்துப்பாட்டில் (திருமுருகாற்றுப்படை 5 அடிகள், பட்டினப்பாலை 18 அடிகள், மலைபடுகடாம் 8 அடிகள், பொருநராற்றுப்படை 1 அடி, பெரும்பாணாற்றுப் படை 5 அடிகள், நெடுநல்வாடை 4 அடிகள், மதுரைக்காஞ்சி 3 அடிகள்) 44 அடிகளைப் பயன்படுத்தியுள்ளார். பதினெண் கீழ்க்கணக்கின் 29 பாடல்களைப் பயன்படுத்தித் தொல்காப்பிய விதிகளை விளக்கியுள்ளார். 11 முத்தொள்ளாயிரப் பாடல்களையும் சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர்குரவை, கானல்வரி, மேற்கோள் வெண்பாவினையும் எடுத்துக்காட்டியுள்ளார்.
- மிகுதியான இடங்களில் செவ்விலக்கியப் பாடல்களை, அடிகளைச் சான்று காட்டியவராக நச்சினார்க்கினியரே உள்ளார். 227 இடங்களில் எட்டுத் தொகைப் பாடல்களையும், பத்துப்பாட்டில் (மதுரைக்காஞ்சி 5 அடிகள், பட்டினப்பாலை 13 அடிகள், மலைப்படுகடாம் 3 அடிகள், திருமுருகாற்றுப்படை 44 அடிகள், பெரும் பாணாற்றுப்படை 5 அடிகள், முல்லைப்பாட்டு 1 அடி, சிறுபாணாற்றுப்படை 1 அடி, நெடுநல்வாடை 5 அடிகள்) 77 அடிகளைச் சான்றுகாட்டியுள்ளார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டு, கலித்தொகைக்கும் உரையெழுதியுள்ளார். அவ்விலக்கிய உரைகளிலும் அவற்றின் வடிவங்கள் குறித்த தொல்காப்பிய விதிகளை அவர் பொருத்திக்காட்டி உரை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பதினெண்கீழ்க்கணக்கின் 71 பாடல்களை யும் 5 முத்தொள்ளாயிரப் பாடல்களையும் சிலப்பதிகாரத்தின் கடவுள் வாழ்த்து, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி, ஊர்சூழ்வரி, துன்பமாலை ஆகிய பகுதிகளையும் சான்று காட்டியுள்ளார்.

- மூவரின் உரைமரபினையும் அவர்கள் செவ்விலக்கியப் பிரதிகளைச் சான்று காட்டி யுள்ள முறைமையினையும் நோக்கும்போது தொல்காப்பியத்தைச் செவ்விலக்கியப் பிரதிகளுக்குரிய இலக்கணமாகக் கட்டமைக்க முயற்சித்துள்ளதனை அறியமுடிகின்றது. கி.மு.5 தொடங்கி கி.பி.5 வரையிலான இலக்கியங்களுக்குத் தொல்காப்பியத்தை மட்டுமே இலக்கணமாக இவர்கள் முன்னிறுத்துகின்றனர். பிற்கால இலக்கியங்களுக்கு மூலக்கூறுகளாக வனப்புகளை இவர்கள் அடையாளங் காட்டுகின்றனர். இவர்களின் உரைகள் மூலமாகச் செவ்விலக்கிய வடிவ மரபினைச் செழுமையாக உள்வாங்க முடிகின்றது.
- தொல்காப்பியர் காலத்திற்கு அடுத்த காக்கைபாடினிய மரபினைச் சார்ந்ததாக உருப்பெற்றவை யாப்பருங்கலமும், யாப்பருங்கலக்காரிகையும். யாப்பருங்கலத்திற்கு எழுந்த விருத்தியுரை இலக்கியச் சான்றுகளைக் காட்டுவதோடு புதிய மேற்கோள் செய்யுள்களைத் தானே படைக்கின்ற முயற்சியினைச் செய்துள்ளது. இருப்பினும் மரபான இலக்கிய மேற்கோள்களையும் ஆங்காங்கே பயன்படுத்தியுள்ளது. தொல்காப்பிய உரைகாரர்களைக் காட்டிலும் குறைவான அளவிற்கே செவ்விலக்கியப் பிரதிகளை இவ்வுரை சான்றுகாட்டியுள்ளது. எட்டுத்தொகைப் பாடல்கள் 53, பத்துப்பாட்டில் (மலைப்படுகடாம் 22 அடிகள், பட்டினப்பாலை 7 அடிகள், மதுரைக் காஞ்சி 6 அடிகள் முல்லைப்பாட்டு 1 அடி) 36 அடிகள் என்றவாறு அவை அமைகின்றன. ஆனால் பதினெண்கீழ்க்கணக்கில் மட்டும் 105 பாடல்களை எடுத்துக் காட்டியுள்ளது. இது தொல்காப்பிய உரைகாரர்கள் காட்டியுள்ள பாடல்களின் அளவினைக் காட்டிலும் மிகுதி என்பது குறிப்பிடத்தக்கது. முத்தொள்ளாயிரப் பாடல்கள் நான்கினையும் சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர் குரவை பகுதியினையும் சான்றுகாட்டி விதிகளை விளக்கியுள்ளது.
- யாப்பருங்கலத்திற்குப் புறநடைபோன்று அமைந்த காரிகைக்கு எழுந்த குணசாகரர் உரையும் குறைவான அளவிற்கே செவ்விலக்கியப் பிரதிகளைச் சான்றுகாட்டியுள்ளது. எட்டுத்தொகையின் 22 பாடல்கள், பத்துப்பாட்டில் (மலைபடுகடாம் 5 அடிகள், பட்டினப்பாலை 4 அடிகள்) ஒன்பது அடிகளை யும் பதினெண்கீழ்க்கணக்கில் 46 பாடல்களையும் சான்றுகாட்டியுள்ளது. சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர் குரவையையும், முத்தொள்ளாயிரத்தின் இரண்டு பாடல்களையும் எடுத்துக்காட்டி விதிகளை விளக்கியுள்ளது.
- யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகையின் குணசாகரருரை ஆகியவற்றின் உரைமரபையும் மேற்கொள் முறைமைகளையும் நோக்கும்போது பதினெண்கீழ்க்கணக்குப் பாடல்களை இவ்விரு உரைகளும் பெருமளவு பயன்படுத்தியுள்ளன. இதற்கு இவ்விருநூல்களின் சமய மரபும் காரணமாக அமைந்திருக்கலாம். இவ்விரு உரைகளும் மூல நூலாசிரியனின் கருத்தினை விளக்குதல் அல்லது அதற்கு வலுசேர்த்தல் என்பதைக் கடந்து அக்காலகட்டம் வரையிலான இலக்கண, இலக்கிய வடிவ வளர்ச்சிப் போக்குனளைப் பதிவு செய்வதனையே முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

துணைநூற் பட்டியல்

1. *அமிசாகரர் இயற்றிய யாப்பருங்கலக்காரிகை, குணசாகரர் இயற்றிய உரையுடன்,* மொழிபெயர்ப்பு குறிப்பு: உல்ரிகே நிக்கல்ஸ், பிரெஞ்சு ஆய்வு நிறுவனம், பாண்டிச்சேரி, 1993.
2. அமிர்தசாகரனார், *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்,* மே.வீ.வேணு கோபாலப் பிள்ளை (ப.ஆ.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மறுபதிப்பு 1998.
3. இராகவையங்கார்,ரா., (பரிசோதனாசிரியர்), *முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்,* செந்தமிழ் பிரசுரம், மதுரை, முதல் பதிப்பு 1905.
4. சோ.ந.கந்தசாமி, *தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் முதற்பாகம் - முதல் பகுதி,* தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு 1989.
5. கோபாலகிருஷ்ணமாசார்யர், ஸ்ரீ.உ.வே.வை.,C.ஜெகந்நாதாசார்யர் (ஆராய்ச்சி உரையாசிரியர்கள்), *பத்துப்பாட்டு,* வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியர் கம்பெனி, சென்னை,1961.
6. சாமிநாதையர்,உ.வே., *ஐங்குறுநூறு மூலமும் பழையவுரையும்,* டாக்டர். உ.வே.சாமி நாதையர் நூல்நிலையம், சென்னை, ஐந்தாம் பதிப்பு 1957.
7. சாமிநாதையர், உ.வே., *பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும்,* டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, எட்டாம் பதிப்பு 2017.
8. செயராமன்,ந.வீ., *சிலப்பதிகார யாப்பமைதி,* அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், முதற்பதிப்பு 1977.
9. தமிழண்ணல், *சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள்,* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, மூன்றாம் பதிப்பு 1985.
10. தமிழண்ணல், *தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் நோக்கு,* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதற்பதிப்பு 1985.
11. தொல்காப்பியர், *தொல்காப்பியம் உரைவளம் பொருளதிகாரம், செய்யுளியல் பகுதி-1,* ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முதல்பதிப்பு 1997, சென்னை.
12. தொல்காப்பியர், *தொல்காப்பியம் உரைவளம் பொருளதிகாரம், செய்யுளியல் பகுதி-2,*3,4, ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மீள்பதிப்பு 2015, 2016.
13. *தொல்காப்பியம் பொருளதிகாரம், செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை,* விளக்கவுரை: கு.சுந்தரமூர்த்தி, கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு 1965.
14. *தொல்காப்பியம் பொருளதிகாரம், பேராசிரியர் உரை (மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல்),* கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு 1972.
15. வெள்ளைவாரணன், *தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம்,* மதுரை காமராசர் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, மதுரை, 1989.

http://Creativecommons.org//license/by/4.0/.

கட்டுரைகள்

1. திருஞானசம்பந்தம்,ப., *இழைபு, தொல்காப்பியக் கவிதையியல் (வடிவம்- பாடு பொருள் - உத்தி - வகைமை),* பதிப்பாசிரியர்: இரா.சம்பத். புதுச்சேரி பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், முதற்பதிப்பு 2015.
2. திருஞானசம்பந்தம்,ப., *யாப்பு, நோக்கு, பயன், தொல்காப்பியச் செய்யுளியல்: புலனெறி இலக்கிய வழக்கு,* பதிப்பு: இரா.சீனிவாசன், ச.சீனிவாசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு 2015.

ஆய்வேடு

1. திருஞானசம்பந்தம்,ப., *தமிழ் யாப்பிலக்கண உரை மரபுகளும் செவ்வியல் யாப்பும்,* முதுமுனைவர் பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 2019.

பின்னிணைப்பு

வரைபடம்

இளம்பூரணர் பயன்படுத்திய எட்டுத்தொகை இலக்கியச் சான்றுகள்



http://Creativecommons.org//license/by/4.0/.

இளம்பூரணர் பயன்படுத்திய பத்துப்பாட்டுச் சான்றுகள்



இளம்பூரணர் பயன்படுத்திய பதினெண்கீழ்க்கணக்கு மற்றும் பிற சான்றுகள்



http://Creativecommons.org//license/by/4.0/.

பேராசிரியர் பயன்படுத்திய எட்டுத்தொகை இலக்கியச் சான்றுகள்



பேராசிரியர் பயன்படுத்திய பத்துப்பாட்டு இலக்கியச் சான்றுகள்



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

பேராசிரியர் பயன்படுத்திய பதினெண்கீழ்க்கணக்கு மற்றும் பிற செவ்விலக்கியச் சான்றுகள்



நச்சினார்க்கினியர் பயன்படுத்திய எட்டுத்தொகை இலக்கியச் சான்றுகள்



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

நச்சினார்க்கினியர் பயன்படுத்திய பத்துப்பாட்டு இலக்கியச் சான்றுகள்



நச்சினார்க்கினியர் பயன்படுத்திய பதினெண்கீழ்க்கணக்கு மற்றும் பிற செவ்விலக்கியச் சான்றுகள்



http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

விருத்தியுரைகாரர் பயன்படுத்திய எட்டுத்தொகை இலக்கியச் சான்றுகள்



விருத்தியுரைகாரர் பயன்படுத்திய பத்துப்பாட்டு இலக்கியச் சான்றுகள்



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

விருத்தியுரைகாரர் பயன்படுத்திய பதினெண்கீழ்க்கணக்கு மற்றும் பிற செவ்விலக்கியச் சான்றுகள்



குணசாகரர் பயன்படுத்திய எட்டுத்தொகை இலக்கியச் சான்றுகள்



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

குணசாகரர் பயன்படுத்திய பத்துப்பாட்டு இலக்கியச் சான்றுகள்



குணசாகரர் பயன்படுத்திய பதினெண்கீழ்க்கணக்கு மற்றும் பிற செவ்விலக்கியச் சான்றுகள்



http://Creativecommons.org//license/by/4.0/.